1979 நவம்பர் 2]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ளதைப் போல், கொடைக்கானலில் இம் மாதிரி தொழிற்சாலைகள் ஏதேனும் தற்பொழுது செயலில் உள்ளதா? அப்படி இருந்தால் அதற்கு அரசு என்ன என்ன உதவிகள் செய்து வருகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நீலகிரி மாவட்டத்தைப் போல், கொடைக்கானலில் 50-க்கு மேற்பட்ட குடிசைத் தொழில்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 4,000 கிலோ அளவுக்கு மேலே அங்கே தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது கொடைக்கானலிலே குங்குலியத்திலிருந்து தைலம் உற்பத்தி செய்வதைப் போல், ஜெரேனியத்திலிருந்து ஆயில் உற்பத்தி செய்யலாம் என்று புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, கற்பூரத் தைலத்தைவிட அதிகமான அன்னியச் செலாவணி ஈட்டித் தரக் கூடிய சுக்குனாரி தைலத்திற்குத் தேவையான மூலிகைப் புல் என்னுடைய தொகுதியில் கிடைக்கிறது. அதனைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்கும் உத்தேசம் உண்டா, அங்கு ஆரம்பிக்கப்பட்டால், அதற்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் கொடுக்கமுடியும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்து, எனது தொகுதியில் கிடைக்கக்கூடிய மூலிகையைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி கற்பூர தைலத்தைப் பற்றியது. அது மலைப்பகுதியில் கிடைக்கும் மூலப் பொருளை வைத்து தயாரிக்கக்கூடிய தைலம். தரைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருளை வைத்து தயாரிக்கக்கூடியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி தயாரிக்க ஏதாவது வாய்ப்பிருக்குமானால் நிச்சயமாக பரிசீலனை செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மங்களூர் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம்

* **வினா எண். 76—திரு. மொ. பெரியசாமி :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால் பால் குளிர் ஊட்டும் நிலையம் அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மொ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மங்களூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே பால் உற்பத்தி சங்கங்கள் அதிகமிருக்கிற காரணத்தால், பால் திட்டத்திற்காக பால் உற்பத்தியாளர்கள் நிறைய இருக்கிற காரணத்தால், அங்கு பால் குளிர் ஊட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, மங்களூர் தொகுதி விருத்தாசலம் தாலுகாவிலே இருக்கிறது. ஏற்கனவே, கள்ளக்குறிச்சி தாலுகாவில் இருக்கக்கூடிய சின்னசேலம் என்ற ஊரில் 12,000 லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய அளவுக்கு, குளிரூட்டக்கூடிய அளவுக்கு ஒரு நிலையத்தை நாம் நடத்தி வருகிறோம். அதற்குத் தேவையான பாலை தயார் செய்து கொடுக்கவே மிகவும் சிரமமாக இருக்கிறது. பாலினுடைய உற்பத்தி அளவு கூடும்போது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வேறு எந்த எந்த ஊர்களிலே இதுபோன்ற பால் குளிர் ஊட்டும் நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது . . . (மணியடிக்கப்பெற்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அடுத்த வினாவை எடுத்துக்கொண்டார்.)

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளை நரம்பியல் பிரிவு.

* வினா எண் 77.—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைக்காயம் பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தனிப்பிரிவு (Neuro-Surgery) ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அங்கு ஒரு Neuro-Surgeon நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) அங்கு புதிதாக தலைக்காயப் பிரிவு ஆரம்பித்து 27—7—1979-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.